# போரூர் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் நிர்வாக அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு.மா.சங்கர், தலைவர் மற்றும் நிர்வாக அலுவலர், போந்தூர் ஊராட்சி

திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம் போந்தூர் ஊராட்சி. காஞ்சிபுரம் மாவட்டம்.

கட்டடம் அனுமதி எண்.07 / 2010-2011 / போ.ஊ / நாள் : 04.07.2013

பொருள் : கட்டிடம் - போந்தூர் ஊராட்சி போந்தூர் 'B' கிராமம், புல எண்கள். 88/1, 91/1, 2,121/1B, 2B, 122/1A, 1B1, 2B, 3, 123/4B, 5B, 498/1B, 499/1, 2, 3, 4, 5, 6, 7, 8, 500/1A, 1B, 2A, 3, 4A, 5A, 6B, 501/4B, 8, 9 10B-ல் 67070 ச.மீ பரப்பளவு கொண்ட மனைக்கு மனையிட ஒப்புதலும். Block-A முதல் Block-K வரை அடுக்குமாடி குடியிருப்புகள். Club House, Shopping Block உபயோக கட்டுமான கட்டட வரைபடங்களுக்கு நிர்வாக அனுமதி உத்திரவிடுதல் சார்ந்து,

பார்வை : 1) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு) செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் ந.க.எண்.5261 / 2012 / செ.ம.3 நாள் : 28.06.2013

************************

உத்தரவு :

M/s. MARG PROPERTIES LTD., கொட்டிவாக்கம், சென்னை - 600041 என்ற நிறுவனத்தினர் போந்தூர் ஊராட்சி போந்தூர் 'B' கிராமம் புல எண்கள். 88/1, 91/1, 2,121/1B, 2B, 122/1A, 1B1, 2B, 3, 123/4B, 5B, 498/1B, 499/1, 2, 3, 4, 5, 6, 7, 8, 500/1A, 1B, 2A, 3, 4A, 5A, 6B, 501/4B, 8, 9 10B-ல் 67070 ச.மீ நிலப்பரப்பில் 139768.05 ச.மீ கட்டட பரப்பில் A முதல் M வரை என எல்லையிட்டு. மவ/நஊது இ(செம) எண்,123/2013 என எண்ணிடப்பட்டு மனை ஒப்புதலும். அம்மனையில் உத்தேச அடுக்குமாடி குடியிருப்புகள். Club House, Shopping உபயோக கட்டுமான வரைபடங்களுக்கு கவ/நஊது இ(செம) எண்.57(1to31)/2013 என எண்ணிட்டு உட்பட்டு இணைப்பில் கண்டுள்ள கட்டட வரைபடங்களுக்கு கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு போந்தூர் ஊராட்சியின் நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. இந்த அனுமதி 05.07.2017 தேதி வரை செல்லத்தக்கதாகும்.
2. இத்துடன் அங்கீகாரம் செய்து அனுப்பப்படவிருக்கும் வரைபடத்தின் கீழ்கண்டபடி கட்டிடம் கட்ட வேண்டும். மேற்படி வரைபடத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் பார்வையிடும்படி தொங்கவிட வேண்டும்.
3. இப்போது கட்டப்போகும் கட்டிடத்தின் வேலை எந்தவிதமான கட்டிடமோ அல்லது மாறுதலோ செய்து கட்டவேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் ஊராட்சி தலைவர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகு தான் கட்டிடம் கட்ட வேண்டும்.
4. வாசற்படிகள் கூரைக் கதவு, கைப்பிடிச் சுவர் சொந்த நிலத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். ஊராட்சி அல்லது சர்க்கார் இடத்திலோ அல்லது தெரு ஓரமாகவோ ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது.

Scanned by CamScanner

5. வரைபடத்தில் குறிப்பிட்டபடி சுகாதாரத் துறையில் பணியாளர்கள் பார்வையிட வசதியாக கக்கூஸ் கட்டிக் கொள்ள வேண்டும்.
6. கழிவு தண்ணீரை பஞ்சாயத்து வடிகால் உள்ள இடங்களில் மேற்படி வடிகாலை விடுவதற்கு வசதியாக தகுந்த முறையில் வடிகால் கட்ட வேண்டும்.
7. மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டும்.
8. சமையலறை, குளியலறை முதலியவைகளுக்கு புகை போக்குவரத்து வசதியாக சரியாக புகைக்கூண்டு கட்ட வேண்டும்.
9. காற்று வசதிக்கு உண்டான ஜன்னல் வெண்டிலேட்டர் முதலியவைகள் அமைக்க வேண்டும்.
10. சுகாதாரச் சட்டம் 26, 23 -வது பிரிவுகளின்படி ஊராட்சி தலைவர் மற்றும் நிர்வாக அலுவலர் அல்லது உணவு சம்மந்தப்பட்ட அலுவலரிடம் குடியிருப்புச் சான்று வழங்கிய பின்புதான் வீட்டில் குடியேற வேண்டும்.
11. வேலை முடிந்த 15 தினங்களுக்குள் வேலை முடிந்த விபரத்தை ஊராட்சி சட்டம் 89-வது பிரிவின்படி எழுத்து மூலம் தலைவர் மற்றும் நிர்வாக அலுவலர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். கொடுக்கப்பட்டுள்ள காலத்திற்குள் வேலை முடியாவிட்டால் உரிய காலத்திற்குள் உரிய கட்டணத்தை செலுத்த மனு செய்து உத்தரவு புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு உத்தரவு வாங்கும்வரை யாதொரு விதமான வேலையும் செய்யக்கூடாது.
12. கட்டப்படும் கட்டிடம் தெரு அல்லது சாலையில் இருந்து 5 அடி உட்பக்கம் தள்ளிக் கட்ட வேண்டும்.

கட்டட வரைபட அனுமதி கட்டணங்கள் ரூ.43,40,916 / 04.07.2013
DD.No. 021679, Dt : 04.07.2013, Bank : Axis Bank, Branch : Thiruvanmiyur

போரூந்தூர் ஊராட்சி பலவகை வரவு ரசீது எண்.000961 / 04.07.2013

பெறுநர்
M/s. MARG PROPERTIES LTD.,
எண்.4/318, இராஜீவ் காந்தி சாலை,
கொட்டிவாக்கம்,
திருவான்மியூர்,
சென்னை - 600041.

4/7/13
தலைவர் / நிர்வாக அலுவலர்,
போரூந்தூர் ஊராட்சி மன்றம்,
திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம்.

Scanned by CamScanner